644

# மாணவரே
# நீர்
# இந்நாட்டு மன்னரானால்...?

தவமணி பேரின்பராஜ்,
இடையன்குடி.

—★—

லை அணா 6.

1950.

# D. S. ஆபிரகாம் அன் கோ,

## ஷாப், ஜவுளி & இங்கிலிஷ் மருந்து வியாபாரம்,

## நாசரேத்.

எங்களிடத்தில் தர்கால நாகரீகத்திர்கேற்ற சகலவித பட்டு, ஜவுளி, தினுசுகள், ஷாப் & ஸ்டேஷனரி சாமான்களும், நவீன முறைப்படிக்குள்ள எல்லாவித இங்கிலீஷ் & ஆயுர்வேத மருந்துகளும், எல்லாவித போட்டோ சாமான்களும் சில்லரையாகவும் மொத்தமாகவும் சகாய விலைக்குக் கிடைக்கும்.

---

# D. S. ABRAHAM & Co.

## Chemists & General Merchants,

## NAZARETH.

Up to-date & cheapest house Wholesale and Retail for drugs, chemicals, Patent medicines, Surgical-sundries Ayurvedic preparations. All varieties of textiles, silks, Photographic goods, Films shop & stationery goods etc etc.

*Sole Distributors for:—*

The Continental Drug Co., Ltd.,

BOMBAY.

# மாணவரே
# நீர்
# இந்நாட்டு மன்னரானால்...?

தவமணி பேரின்பராஜ்,
இடையன்குடி.

—★—

விலை அணா 6.

# முகவுரை

என் முதற்பணி பாடசாலை மாணவர்களுக்கே என்பதை எண்ணிப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய சமுதாயத்தில் மலிந்து நிற்கும் சனாதன மூடக் கொள்கைகளையும், வகுப்பு வாத வெறிகளையும், சமயஜாதிப் பூசல்களையும், கருப்புச் சந்தை, லஞ்சம் போன்ற கயமைக் குணக்கேடுகளையும், குழிதோண்டிப் புதைத்துக் குடியரசு இந்தியாவில் கோல் ஏந்த, இளைஞர்களுக்கு ஆலோசனைகளும், எச்சரிக்கைகளும் குறிப்பாக அளிக்கிறது இச் சிறுபதிப்பு. படித்து பயிற்சிபெற்று, பயன்பெறுவது மாணவர் கடன்.

இச்சகைய பணிகளில் பெரிதும் என்னை உற்சாகமூட்டி, ஆலோசனைகள் அளித்த பெரியோர்களான:—

Rev. சத்திய சாமுவேல் B. A., L. T.,
(பிரின்ஸ்பால் Tng. School பாளையங்கோட்டை)

Rev. என்றி அருளானந்தம் B. A., L. T.,
(கால்டுவெல். உ. நி. பா. தூத்துக்குடி.)

Mr. V. தங்கத்துரை B. A., L. T.,
(மர்க்காஷிபஸ் உ. நி. பா. நாசரேத்)

Mr. K. சண்முகசுந்தர நாடார்
(Wholesale dealer Ration food stuffs K. T. S)

Mr. ஜேம்ஸ் ஜெபகனி
(V. E. Road Tuticorin.)

நண்பர்களான:- Sri. D. ரெத்தீன், Sri. S. டிக்ஸன் அவர்களுக்கும் இலங்கை வாழ்ப் பேனுமுனைப் பிரியர்களான Sri N. C. வரதராஜா, Sri N. A. சுப்பிரமணியன் அவர்களுக்கும் என் நன்றி.

இச்சிறு பதிப்பிற்கும், தொடர்ந்து அச்சகத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் புத்தகத்திற்கும் தங்கள் பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுத்துதவிய Mr. ஜேம்ஸ்ஜெபகனி அவர்களுக்கு மீண்டும் என் ஆழ்ந்த நன்றி.

அதே உதவியை அன்புடன் தந்துதவிய பிரஸ் மானேஜர் (S. A. S. RAMASWAMY) அவர்களுக்கும் என் நன்றி.

இடையன்குடி
28—2—50

தவமணி பேரின்பராஜ்,
ஆக்கியோன்.

## S. M. விக்டர் ராஜ்,

### ஷாப் & ஓரியண்டல் வைர வியாபாரம்,

ரெயில்வே ஸ்டேஷன், நாசரேத்.

நம் கடையில் அசல் ரெங்கூன் ஓரியண்டல் வைரமும், ரெங்கூன் பட்டை சிகப்பு, நெக்லஸ் கம்மல் முதலியவைகளுக்குக் கமலமும், பலவித மான கண்ணைக்கவரும் டாலர், மாலை கற்களும் நம்பிக்கையுள்ளனவாகவும், சரசமாகவும் கிடைக்கும்.

மற்றும் ஆசாரிமாருக்கு வேண்டிய குளோப் வாள் தகடு, வடி முதலிய ஆயுத சாமான்களும் கிடைக்கும்.

## S. சங்கரசுப்பு ஆச்சாரி,

மெயின்ரோடு, சாத்தான்குளம்.

### ஜுவல்ரி, கோல்டு, எனமல், டையமண்ட் கட்டிங் ஒர்க்ஸ்.

தற்கால நாகரீகத்துக்கேற்றபடி நவீன வேலைப்பாடுடன் வளையல், செயின், நெக்லஸ் முதலிய சாமான்களுக்கு சுத்தமான மெழுகுடன் வைரப்பட்டம் அடித்துக் கொடுக்கப்படும். பல கலர்களில் மோதிரம், பென்டன், வளையல் மற்றும் இதர சாமான்களுக்கும் எனமல் வேலைகள் செய்துகொடுக்கப்படும். நகைகள் பூரவும்திறந்த, மூடுகட்டுகளில் வேலைசெய்து கொடுக்கப்படும். மற்றும் இதர சாமான்களும் குறித்த நேரத்தில் கியாரண்டியுடன் செய்து கொடுக்கப்படும்.

Branch:- **M. P. குமாரசுவாமி,**

ஷராப் மெர்ச்சண்ட்,

சோனகன்விளை. அம்மன்புரம் (P. O.)

# மாணவரே

# நீர் இந்நாட்டு மன்னரானல் .....?

மண்ணாசை பிடித்து சர்வாதிகாரத்தை இச்சித்து அட்ட திசைகளும் ஆட்சிபுரிய திட்டங்கள் தீட்ட ஒரு கிட்லர். தன் இன்னுரையால் ஜெர்மன் மக்களுக்கு எடுத்தோத ஒரு கொயபல்ஸ். V¹ V² வகையில் போர் முனையில் வெற்றி காட்ட ஒரு கொயரிங் மண்டலம் புறக்க ஒரு மன்னன். மதியூட்ட ஒரு மதியூக மந்திரி. செங்குருதி பருகும் கூரிய வேல், வாள் ஏந்தி வெற்றியைப் போர் முனையில் காட்ட ஒரு போர்த்தலைவன். மன்னன் மண்டலம் ஆள்வான். அமைச்சன் அரசாள அறிவு தருவான். போர்த்தலைவன் போர்ப்பாதை செப்பனிடுவான். இது பண்டைய ராஜ்யங்களின் பரம்பரீய இராஜிய பாதை.

மாற்றாரை மாய்த்து மண்ணில் தள்ளியும், பிரிய சகோதரர்களை படுகொலைபுரிந்தும், பெற்றோரைச் சிறைக்கூடங்களில் அனுமதித்தும், நெருங்கிய உறவினர்களின் நேத்திரங்களைப்பிடுங்கியும் மன்னர்கள் மகுடங்கள் தாங்கி, மண்டலங்கள் ஆண்டதற்கு சரித்திரங்களில் சரிதங்கள் செறிந்து நிற்கின்றன. ஆணவ அரசபதவி என்னும் அசுவத்தில்; அவைக்காரி, அழகுக்காரி, ஆடம்பரக்காரி, சிங்காரி, ஒய்யாரி, குச்சுக்காரி, மாயஜாலக்காரி என்னும் ஆசை

நாயகியாம் காமக்கிழத்திகளை லகான்களாகப் பிடித்து அநீதி ஆடம்பரம் காமம் களியாடு என்னும் சேணத்தில் அமர்ந்து; சர்வாதிகாரம் என்னும் ராஜ வீதியில்; தற்பாராட்டு என்னும் பிரதானிகள் சூழ மன்னர்கள் மண்டலங்கள் ஆண்டனர்-அழிந்து பட்டனர்-ஆதாரங்கள் உண்டு.

கார்த்திகேய மன்னனுக்கும் பூவேந்திர பூபதிக்கும் பெரும் போர். இருதரப் படையினரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டார்கள் சதுர்ச்சேனைகளோடு அப்பப்பா! காணக் கண் கலங்கும் கடும்போர். மின்னல் ஒளி பின்னிட மோதி 'விங்விங்' என்று இரைச்சலிட்டு வெட்டி மின்னிச் சுழலும் வாட்களின் பிரகாசம்தான் என்ன? எரி ஈட்டிகளின் இரைச்சல் தான் என்ன? சுழலும் வாட்களிலே சுழன்று வீழ்ந்த வீரர்களின் சிரங்கள் எத்தனை? குதிரைகளின் குளம்படிகளிலே சிக்கிச் சிதைந்து, மத யானைகளின் மத்தளங்களில் மோதி மடிந்த மாவீரர் எத்தனை? பத்துநாட் பலத்த போரிலே அப்பள்ளத் தாக்கிலே இரத்தக் கறை படிந்துவிட்டது. எங்கும் இரத்தக்கறை. இரத்தவாடை. பிண நாற்றம். முறிந்த முண்டங்கள், தலையுருவுண்ட பிணங்கள். காலிழந்த கண்டங்கள். உருத்தெரியா உருவங்கள். கண்ணற்றக் கபோதிப்பிணங்கள். பகலிலே பிணங்களை கழுகுகள் கொத்திக் கிழித்தன. இரவிலே ஓநாய்கள், பேநாய்கள் ஓரிகள், பிணங்களைப் பட்சித்தன. பகலிலே பெற்றோர் ஒப்பாரி. இரவிலே பிணநாய்கள் ஊளை! "மாற்றாரை மாய்ப்பேன்"

என்று மார்தட்டியோரின் மண்டை ஓடுகளும்; 'எதிரியை என்ன செய்கிறேன் பார்' என்று எக்காளம் கொட்டியோரின் எலும்புக் கூடுகளுமே மீந்திருந்தன, சுடுகாடான அப்போர்க்களத்திலே.!

கார்த்திகேய காவலன் கோல் ஏந்திய கார்தார தேசத்திலே குளங்கள் தண்ணீரால்லல-கண்ணீரால், நிரம்பி நின்றன. எங்கும் ஒப்பாரி. பெற்றோரின் புலம்பல். காதலர்களை இழந்த காதலிகளின் கூக்குரல். அழுகுரலிலே அத்தேசம் எதிரொலித்து நின்றது' வாள் வீச்சிலே வீரர்கள் வாழ்விழக்கவும் போர் வீரர்கள் பிணநாய்களுக் கிரையாகவும், கோமான் கோலுக்குட்பட்ட குடிகளைக் கழுகுகள் கொத்திக் கிழிக்கவும் காரணமான இப்போர்தான் எங்ஙனம் ஏற்பட்டது? ஊரைச்சுற்றி பிணநரிகள் ஊளையிடவும் ஒப்பாரிக்குரலால் ஊர் அல்லோல கல்லோலப்படவும் காரணமான இப்போருக்குக் காரணம்தான் என்ன? பூவேந்திர பூபதியின் புத்திரி பரிமளவல்லியை கார்தாரா மன்னன் இரண்டாம் தாரமாக மணக்க ஆசித்துத் தூது அனுப்பினனாம்! பூவேந்திர பூபதி மறுத்துவிட்டானும்! போர் மூண்டதாம் எப்படி?

---

மாணவர்களும் மாணவிகளும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது ஒழுங்கைக் கற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களுடைய படிப்புக்காகச் செலவிட்ட பணம் தேசத்திற்கே பெரிய நஷ்டம்.

காந்திஜி

மண்டலம் ஆளும் மன்னன் மணக்க முற்பட்டான், மனமுவந்த மங்கையை; மன்னனுக்குமங்கை கிட்டவில்லை. போர் புரிந்துவிட்டான் புவியாள்வோன்.

மன்னன் ஒருவன் மனச்சுகத்துக்காக மடிந்த மக்கள் பிணநரி வாய்புகுந்த மக்கள். சுடுகாட்டுப் புகையிலே புகைந்தமக்கள், காதலிகள்கண்களிலே நீர் சொட்டச்செய்த மக்கள். எத்தனை எத்தனையோ.........! காவலனின் காமவேட்டைப்போரிலே, சுயநலப்போரிலே, தன் காதலன் காலன் வயப்பட்டதைக் கண்டு கனன்றெழுந்த ஓர் இளங் காரிகையின் கைக்கட்டாரி கார்த்திகேய மன்னன் மார்பைக் குத்திப்பிளந்தது. மன்னன் மாண்டு மண்ணில் வீழ்ந்தான்.

அறப்போர் வீரரைக்கண்டு மறப்போர் புரிந்து மாண்டு மறைந்த மன்னர்கள் எண்ணிக்கை ஏட்டில் அடங்கா.

மன்னன் மண்டலம் ஆள்வான். மதுவுண்பான் மதி மயங்குவான். மனப்போக்குகளுக்கெல்லாம் மண்டியிட்டுப் பணிவான். 'வீரர்களே வாருங்கள்' என்பான். வனத்துக்குச் செல்வான். வேட்டையாடுவான். நாடு திரும்புவான். நவரத்தின மணியாரங்கள் பூட்டிப், பட்டத்து யானையில் பவனி வருவான். பணிந்து நிற்கும் பிரஜைகளைக்கண்டு பெருமிதங் கொள்வான். "இவர்கள்எனக்கு அடக்கம்" என்று எண்ணுவான். மார்பு விம்மி தோள்கள் பூரிக்கும்.

வசந்த மண்டபத்தில் வீணே காலம் விரையமாகும். பொக்கிஷமும் பூஜ்யமாகும் பொக்கிஷத்தைப் பூர்த்திசெய்ய புதுப்புதுப் பொருளாதாரத் திட்டங்கள் வெளிவரும். எழுந்தால், நடந்தால், பயிர் பச்சைகள் பாழானல், மேனிகண்டால், என்ற வரித் திட்டங்கள் ஏழைகளையும், பாமரர்களையும் பாதிக்கும். நாடுவிட்டு காடு ஏகுவர், வரிகொடுக்க முடியாத வறுமையாலும், வாரடிக்குத் தப்பும் நோக்கத்தாலும். "காட்டுக்குச்சென்ற கயவர்களைக் கட்டியிழுத்துவர நம் குதிரை வீரர்கள் ஏன் இன்னும் தயங்குகிறார்கள்" என்று கர்ஜிப்பான் காவலன். மறுகணம் குதிரைகளின் குளம்படி ஓசை கேட்கும். எங்கும் தூசுப்படலம் ஆகாயத்தை மறைத்து நிற்கும். வெறித்த பார்வையில் விசாரணை மண்டபத்தில் வேந்தன் வீற்றிருப்பான். "ஆ, ஐயோ, ஐயோ அம்மா" என்று கை கால் பிணைக்கப்பட்ட, கசையால் குருதி கொட்ட அடிக்கப்பட்ட, வரிப் பழுத்தாங்க இயலாமல் வனம் ஓடி வாழ்ந்த வேல்சாமியின் பலவீனக்குரல் கேட்கும் விசாரணையும் ஆரம்பமாகும்.

மன்னன்:- யார் இவன்?

குதிரைவீரர்:- வரிகொடாது வனத்தில் வாழ்ந்த வேல்சாமி இவன்தான்.

---

யோக்கியமான வீட்டுக்கு இணையான பள்ளியும், யோக்கியமான பெற்றோர்க்கு இணையான ஆசானும் இல்.

காந்திஜி

மன்னன்:- வேல்சாமியா? வேல்சாமியை நம் வீரர்கள் பிடித்துவிட்டார்களா? கொண்டு வா ஒரு புட்டி மதுவை, நம் வீரர்களுக்கும் கொடு நீ ஏன் காட்டில் வாழ்ந்து வருகிறாய்?

வேல்சாமி:- (மௌனம்.)

மன்னன்:- மௌனம் சாதிக்கிறான் மடையன் கசையெடு.

(கைவலிக்கக் கசையாலடிக்கிறான்)

வேல்சாமி:- "ஆ ஐயோ. அம்மா பயந்துங்க"

மன்னன்:- யாருக்கு.

வேல்சாமி:- வரி வசூலிப்பவர்களுக்குங்க. வாரால் அடிக்கிறாங்க. வட்டில் சொம்ப போட்டு ஒடைக்கிறாங்க பெண்டு பிள்ளைங்களை போட்டு அடிக்கிறாங்க அவமானம் பண்ணுறாங்க, வமிசம் பேருசொல்லப் பெத்தபிள்ளைங்களெ வாளால குத்திக் கொல்லுறாங்க இதுநாயங்களா?

மன்னன்:- வரப்ப கிண்ற நாயி ஞாயம் கேட்குது! இதுதான் விநய விசாரணை! இதுதான் வேந்தன் விசாரிக்கும் வழக்கின் முறை! மதுவால் கண்சிவந்த மன்னன் "நியாயமாகேட்கிறாய் நீ" என்று கனல் கக்கக் கத்துவான். கட்டாரி, நிரபராதியின் நெஞ்சைப் பிளக்கும், எப்படி?...காவலர்களின் சுயநீதி-ஆனல்.

சுயநலத்துக்காக போரிட்டு சேனைகளைப் பலி கொடுத்துப் பாவையர் பண்பைப் பறித்து நின்ற மன்னர்கள் மாண்டுவிட்டனர்.

மதுவுண்டு மதிமயங்கி மனப்போக்குகளை அடக்கியாளும் திறமையற்றிருந்த அரசர்கள் அழிந்துவிட்டனர்.

தான் அரசன்; மக்கள் அடிமை, என்று எண்ணி, அகந்தையை அணைத்துக்கொண்ட அரசர்கள் அழிந்துவிட்டனர். அதோ, அவர்கள் இருந்த இடம்கூட மறைந்துவிட்டது.!

மோகச்சேற்றிலேமூழ்க, மூர்க்கவெறிகொண்டு போர்மூட்டிய மூடமன்னர்கள் மறைந்துவிட்டனர் அதோ குடிகளைக் கசையாலடித்து, வசைமொழி பகர்ந்து கால்கரங்களைப் பிணைத்து குதிரைகள் கால்களில் கட்டியிழுத்துக், கிட்டிய வரிப் பணத்தைக் குடிகளின் நலத்துக்கல்லாது நாட்டியமாடிய நங்கையருக்கு நவரத்தின மாலையாகத் தந்து நின்ற மன்னர்கள் மடிந்து மறைந்துவிட்டனர். வன வேட்டையை வேலையாகக் கொண்டு, வேந்தர் தொழிலை விளையாட்டாக எண்ணி நின்ற வேந்தர்கள் வெந்து சாம்பராகிவிட்டனர். அதோசுடுகாட்டிலே புகைப் படலம் மண்டுகிறது துன் மந்திரியின் துயர் மதியால் தன் தூய்மை மனதைத்துறந்து, துணிச்சலாய்ப் பாரபட்சத் தீர்ப்புத் தந்து, தரணியாண்டோர் அஸ்தி அதோ அந்த அலைகடலிலே கலந்துவிட்டது மமதை மன்னர்கள் மடிந்து சுயநலப் பூபதிகள் சூன்

யமாகிவிட்டனர். காமச் சேற்றிலே புரண்ட காவலர் களைக் காலன் கவர்ந்துவிட்டான். குருதி கொட்டக் கொட்ட கண்களிலே நீர் சொட்டச் சொட்ட பாடு பட்டுக் கொடுத்த நாட்டு மக்களின் வரிப் பணத்தை பரத்தைகளுக்கும், தாசிகளுக்கும் பரிசில்களாகப் பகிர்ந்தளித்த மன்னர்கள் மண்ணோடு மண்ணாகி விட்டனர். வரப்போகும் வாளேந்திகளுக்கு-தலைவர் களுக்கு, நிர்வாகிகளுக்கு எச்சரிக்கை ஸ்தம்பங் களாய் சரித்திரத்திலே காட்சி தருகின்றனர் சுயநல காமச்சேற்றில் புரண்ட, பாரபட்சத் தீர்ப்பளித்த பண்டைய மன்னர்கள்!

முடியாட்சி மறைந்து, குடியாட்சி மலர்ந்து விட்டது. இந்நாட்டிலே. சுதந்தரச் சூரியன் பூரணப் பொலிவுடன் வானில் எழுந்துவிட்டான். முடியாட்சி மறைந்து. குடியாட்சி மலர்ந்து, சுதந்திரச் சூரியன் வானில் தோன்றிப் பொலிவுறும் இந்நாட்டிற்குத் தலைவர்கள் வேண்டும், நிர்வாகிகள் வேண்டும், தொண்டர்கள் வேண்டும், பணியாட்கள் வேண்டும். தலைவர் என்ற பதத்திற்கு தந்நலம் அற்றவர்என்று பொருள்தரும் தலைவர்களும் நிர்வாகி என்ற பதத் திற்கு நேர்மை நீதி தவறாதவர் என்று பொருள் தரும் நிர்வாகிகளும் வேண்டும். தலைவனல்ல நான் தொண்டன் என்ற தகைமை வேண்டும். தலைவர் களுக்கு நிர்வாகியல்ல நான் நாட்டுமக்களின் நண் பண் என்ற நினைவுவேண்டும். நிர்வாகிகளுக்கு. இஃ தினை நன்கு உணர்ந்தே குடியாட்சியிலே தலைவர்

என்ற தனி வகுப்பில்லை. பாமரன் என்ற ஒரு பிரிவு மில்லை. கல்விகற்று அறிவு படைத்த எந்த நபரும் தலைமைப் பதவியை நிர்வாகப் பொருப்பை ஏற்க லாம். ஆதலால் மாணவர்களே நீங்களே இந்நாட்டுத் தலைவர்கள்-நிர்வாகிகள் - தூண்கள். தகுந்தப யிற்சி பெருங்கள். தலைமை தாங்குங்கள், தேச நிர்வாகத் திற்கு என்று நம் தலைவர்கள் மாணவர்களைநோக்கி அறைகூவி அழைக்கின்றனர் "மாணவரே" நீவிர் இந்நாட்டுத் தலைவர்கள். நிர்வாகிகள். இது தலைவர் களின் கோஷம். ஆம் மாணவரே நீவிர் இந்நாட்டு மன்னர். தலைவர். தலைசிறந்த தொழில். பொருப் புள்ள பதவி. மதிப்புள்ள வேலை. மாணவர் இந் நாட்டை ஆள வேண்டும். நிர்வாகம் ஏற்கவேண்டும். மாணவர்களைத் தலைவர்களின் கோஷம் தட்டி எழுப்புகிறது. தலைமை தாங்கும் தகைமை மாணவ ருக்கு உண்டா? மன்னவராகும் மாண்பு மாணவ ரிடம் மண்டிக் கிடக்கிறதா? முடியாட்சி மறைந்த இந்நாட்டில் மாணவர் ஆட்சி மக்களை மகிழ்விக்குமா? என்ற கேள்விகள் தொனிக்கின்றன.

மாணவரே உம் பதில்...........?

மாணவரே அழைப்பை ஏற்று அரசியலை அலங்கரியுங்கள். தலைவராகுங்கள். நிர்வாகியாகுங்கள்

---

ஒரு லட்சியத்தைத் தெளிந்த அறிவுடன் ஏற்றுக் கொண்டு, அதை அடைவதில் எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் தளராது முயல்வதுதான் புருஷார்த்தம்.

காந்திஜி

மாணவரே, தலைமைதாங்கி பாலைவனங்களைப் பூங்கா வனங்களாக்குங்கள்: ஆந்தைகள் அலறும் சுடுகாடுகளை குயில்கள்பாடி மயில்கள் ஆடும் மாந் தோப்புகளாகமாற்றுங்கள் சீர்குலைந்த இந்நாட்டைச் செப்பனிடுங்கள். மடமை நிறைந்த மண்டலத்தை கடமையுணரச்செய்யுங்கள். ஊழல் நிறைந்த இச் சமுதாயத்தை, உருக்குலைத்து, ஒப்பற்ற ஓர் சமுதா யத்தை உருவாக்குங்கள். நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நாட்டின் நலத்தையே நாடி நீதி, நேர்மையை நிலை நாட்டுங்கள். சமூக ஏற்றத்தாழ் வென்னும் சனதனக்குழிகளை சமப்படுத்துங்கள். சமயச்சண்டைகளுக்கும்; வகுப்புவாத வெறிகளுக் கும், ஜாதி குலச்செறுக்குகளுக்கும் சாவுமணியடி யுங்கள். லஞ்சம் என்னும் வஞ்சப்பேயை நாட்டை விட்டு ஓட்டுங்கள். காலக்கிரமத்தவறுதல், பாரபட் சத்தீர்ப்பளித்தல் போன்ற கண்ணியககுறைவான கிரியைகளுக்குக் கசையடி கொடுங்கள். கருப்புமார்க் கட் காதகர்களைக் கழுவிலேற்றத் தீர்ப்பளியுங்கள். கரைபுரளும் கடும்பசிப்பிணி நோய் மறைந்துபோக மார்க்கம் தேடுங்கள். செந்நெல்லும், கன்னலும் செழித்துக் கொழிக்கக் குடியரசு இந்தியாவிலே கோல் ஏந்துங்கள்.

நும் ஆட்சியில், நம் நாட்டில் நவஜீவன் ததும் பட்டும். நல்லறங்கள் வளர்ந்து நாடுசெழிக்கட்டும்.

---

மானவர்களே! நீங்கள் சபா மண்டபத்தின் தூண்கள்.

Rev: சத்நிய சாமுவேல்.

மலைகள் வழிந்து, மடுக்கள் நிரம்பட்டும். காஞறுகள் கட்டுப்பட்டு, மடை திறந்து பாயட்டும். கலைகள் பெருகி, கல்வி கொழிக்கட்டும். வறுமை ஒழிந்து, வண்மை பொழியட்டும். பராக்! முடியாட்சி மன்னர்கள் எச்சரிக்கை தருகின்றனர்,

மண்டலம்! ஆண்ட மன்னர்கள், மாளிகையிலே பிறந்து, குருகுலப்பயிற்சிக் கூடத்திலே கல்விகற்று, அறிவுதரும் அமைச்சரோடு அறம் காக்கும் படை ஒன்றுதிரட்டி பாராண்டனர். ஆனல் மன்னரிற் சிலர் மண்டலம் புறக்கப் பிறந்தோம் என்றமமதையால், அறிவுதரத்துன் மந்திரிகளைத் தெரிந்தெடுத்து. அறம்காக்கும் படைகளைக்கொண்டு அநீதிப்போர் புரிந்து, அழிந்து பட்டனர். தரணியாள்வோனல்ல, நான்தொண்டன், பூபதியல்ல, பணியாள் என எண்ணி, நன் மந்திரியின் ஆலோசனையால் அறப் போர் செய்து. கண்ணியமுடன் குடிகளைக் காவல் செய்த காவலர்கள் கௌரவிக்கப்பட்டனர்''

மாணவன் மாளிகையில் பிறந்தவனு?

அமைச்சர்களும் அறப்போர் வீரர்களும் உண்டா? என்ற வினக்கள் விடைவேண்டி நிற்கின்றன.

---

நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ தன்மானத்தைக் காத்துக் கொள்கிருள்.

நீதிமொழிகள்

இதோ:- பள்ளியே மாளிகை. நல்லொழுக்கமும், தூய மனப்பண்பும், தூய உடல் வளர்ச்சியுமே மைச்சர்கள். நல் மனச்சாட்சியே அறப்போர் வீரர்.

### பள்ளியே மாளிகை.

குறிப்பிட்ட குலத்திற்குத் தஞ்சம் தந்தது, பண்டைய மன்னர்களின் மாளிகைகள். வேந்தர் வம்சத்தோன்றலானல், வாழ வழியுண்டு வேந்தர் மாளிகையிலே. ஆனல் அதிகார பலம் கொண்டால், அரண்மனையை ஆக்கிரமித்துக்கொள்ளலாம். அடிமைக்கும். அநாதைக்கும். அபலைக்கும். பாமரனுக்கும். பரமதரித்திரனுக்கும் அங்கே இடமில்லை. ஆனல் குடியாட்சியிலே, ஜாதிமத குலவம்ச வகுப்புவாத வேறுபாடின்றி தஞ்சம் அளிக்கும் அரண்மனை பள்ளிககூடமே. எத்தகைய ஏழைக்கும் இங்கே இடமுண்டு. மன்னராக, தலைவராகப்பயிற்சியுமுண்டு. இங்கே பயிற்சிபெற்று மாண்புள்ள சமுதாயத்தை சிருஷடித்து மங்காதபுகழை மடிமீதுகட்டிக்கொள்ளலாம் அல்லது மமதைகொண்டு, அகந்தையோடு அழிவை அணைத்துக் கொள்ளலாம். மாசற்ற, மாண்புள்ள சமுதாயத்தை ஒப்பற்றமுறையில் மாற்றியமைக்கும் விருப்புள்ளோருக்கு பள்ளியேமாளிகை.

### நல்லொழுக்கப் பயிற்சி என்னும் நல் அமைச்சர்.

'ஒழுக்கம் விழுப்பம் தருவதால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.'

நயனர் நல்லுரை. ஒழுக்கம் கெட்ட உயிர் அழிந்துபடும் என்பதை அமரகவி அறிந்தார். ஒழுக்கம் கெட்ட உலகில், ஒழுக்கம் கெட்ட குடும்பங்கள். மன்னர்கள் மாண்டுமடிந்ததை மறைதந்தவள்ளுவர் கண்டார் போலும். உயிரினும் ஒழுக்கமே மேல் என்றஉண்மையை உலகு உணரக்கவிதைகளிலே

கருத்தைக் கோர்த்துத்தந்தார் கவி. கல்வி நிலையம் புகுந்த மாணவரே! நாயனர் நல்லுரைகளைப் பள்ளி களிலே பயிலும் பாலரே! நாட்டிற்கு நலம் நல்கும் நல்லொழுக்கப் பற்சியிலே நாட்டம் உண்டா? நல் லொழுக்கக் கருத்துக்களை சுமந்து, பாடத்தில் இடம் பெறும் செய்யுட்களையும், வசனங்களையும், படிக்கும் நீங்கள் அஃதினை உங்கள் தினசரி வாழ்க்கையில் அனுபவிக்கும் முயற்சியில் என்ருவது ஈடு பட்ட துண்டா?

'டுலும், டுலும்,' வெடி குண்டுகளின் சப்தத்தால் அலைகடலே அதிரிடும் போர். பிரஞ்சு புரட்சித் தலைவன், ஐரோப்பாவே கண்டு அஞ்சும் ஆற்றல் வாய்ந்த நெப்போலியன் ஒருபுறம். ஈட்டன் கல்லூரி யிலே நல்லொழுக்கப் பயிற்சியும், கட்சி உணர்ச்சிப் பயிற்சியும் கற்று உருவாகிய ஒப்பற்ற கப்பற் படைத் தலைவன் நெல்சன் மறுபுறம். பீரங்கிகள் முழங்குகின்றன. விண்ணும், மண்ணும் அதிர தேவர் கள் திக்குமுக்காடுகின்றனர். பாண்டு வாத்தியங் களின் ஒலியும், பிணமாகி வீழ்ந்த வீரர்களின் பெரு மூச்சும், போட்டியிட்டு எதிரொலித்தன, கப்பல் களின்மேல் தளங்களிலே. குண்டுகளுக்கு இலக் கான கப்பல்களோ கடலின் அடித்தளத்தை அடைந்து கொண்ருந்தன! "go on fire" என்று கப்பித்தான்கள் கர்ஜனை செய்தனர். 'நானிலமே நடுங்கச்செய்யும் நெப்போலியன் முன், இந்த நெல் சன் எங்கே நிற்கமுடியும்? என்று நினைத்தது பொதுஜனம். போர்முடிந்துவெற்றிக்கோஷம்கிளம்

பியது. யாருக்கு வெற்றி? முடிவு என்ன? ஈட்டன் கல்லூரியின் விளையாட்டு ஸ்தலத்தில், பெற்ற நல்லொழுக்கப்பயிற்சியால்'ஒட்டர்லூபோரை'வென்று ஒப்பற்ற வீரன் நெப்போலியனை அடிபணியச்செய்தேன் என்று நெஞ்சு தட்டி நின்றான் நெல்சன். நான் அடையும் நல்லொழுக்கப் பயிற்சியால், நான் பிறந்த நாட்டை பெருமையடையச் செய்வேன்; மேன்மையுறச்செய்வேன் என்று முரசு கொட்டும் மாண்பு மாணவருக்குண்டோ?

நல்லொழுக்கப் பயிற்சியிலே தலையாயதும் நம் நாட்டின் நல் வாழ்வுக்கு நன்கு பயன் படுவதும் காலக்கிரமம் தவறாமை காத்து ஒழுகல் எனின் குற்றமாகாது.

காலக்கிரமம் தவறுதலே தனக்கொரு கண்ணியம் என்ற எண்ணம் இன்றைய சில புண்ணியவான்கள் அகத்திலே, உத்தியோகஸ்தர் உள்ளத்திலே, ஊறிப்போயிருக்கிறது, என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயங்களிலே ஒன்று. மாலை ஆறு மணிக்கு அழகு பவனில், அழகேசர் விழா, அகில உலக புகழ் ராவ்பகதூர், டாக்டர் ஆதி நாராயணன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகும் என்ற அச்சிட்ட அழைப்பு அனுப்புவதும், குறித்த நேரம் மக்கள் கூடி,மேடை காலியாயிருக்கக் கண்டு முணுமுணுக்கவும், கற்கள் சிறகடித்துப் பறக்கவும், கலாட்டா வலுக்கவும், போலீசார் புஸ்வாணம்முதல் "டுப்டப்" வாணம் வரை வேட்டு எழும்பவும், சிலர்

120253



சிறைக்கூடம் செல்லவும், ஸ்ரீமான் தலைவர் அவர்கள் எட்டு மணிக்கு எவர்லஸ்ற் காரில் எம். எல். ஏக்கள் சூழ, மேளதாளங்கள் ஒலிக்க, அதிர் வேட்டுகள் எழும்ப, மலர் மாலைகள் மணக்க மேடையேறவும் காணும்போது மாணவர்களே என்ன எண்ணுகிறீர்கள்? ஒரு அழகேசர் விழா ஆரம்பமாகும் அறிகுறியாக ஒரு கல்லெறி, பலருக்குக் காயம், ஒரு கலாட்டா, போலீஸ் இடையீடு, இருவர் சிறை, கோர்ட்டு விவகாரம் முடியும்வரை இருவரை நம்பி வாழும் குடும்பங்கள் பாழ். காலக்கிரமம் தவறுவது கண்ணியமாகத் தெரிகிறது கனவானுக்கு, கனம் தலைவருக்கு ஆனல் கஷ்டமும் நஷ்டமும் தந்து சிறைக்கூடம் தள்ளுகிறது பொது ஜனங்களை. கனவான் கனவிலேயும் கவனிப்பாரா இச் சீர் கேட்டை? சிந்திப்பாரா இச் சீரழிவை? கனவான் கண்ணியம் என்று எண்ணும் காலக்கிரமத் தவறுதலை பொது ஜனம் பெரு நஷ்டம் என எண்ணுகிறது.

மாணவரே நீர் இந்நாட்டு மன்னரானல், தலைவரானல் பரிகாரமுண்டா? நீர் அழகேசர் ஆரம்ப விழாவுக்கு அக்கிராசனராக அழைக்கப்பட்டால்... ...............?

"அதோ அவன் தான் ஆலங்குடி, ஆண்டியப்பன். கந்தல் உடை, களையற்ற முகம். களைப்புற்ற அங்கங்கள். தள்ளாடிய நடை."

---

மதுபானம் பண்ணுகிறவர்கள் சிறுமைப்பட்டவர்கள் ஞாயத்தைப் புரட்டுவார்கள். நீதிமொழிகள்

**ஒரு நபர்:-** ஆண்டியப்பா, மூன்றுநாளா காலெயிலே வந்து பங்களாவிலே காத்துக்கிடக்கே பொழுதுஅடையப்போச்சில போச்சில போவுறியே என்னங்க அது?

**ஆண்டியப்பன்:-** அதுங்களா, மூணும் வரியம் என் ஊடு தீ பட்டுப் போச்சில, அதுக்கு ஏதாம் உதவி செய்யணும்ணி மனுப் போட்டிருந்தேன் அதுக்கு எசமான் இங்கே கேம்ப்பு பண்ணிருக்காருல்ல. மூந்தானுத்து உதயத்திலேயேஎட்டர மணிக்கு வரச்சொல்லி தலெயாரி சொள்ளமுத்துக் கோனரு வந்து சொன்னரு, நானும் காலங்காத்தாலே வந்தேன்.

**ஒருநபர்:-** ஆமா. நானும் பார்த்தேன்.

**ஆண்டியப்பன்:-** எசமா எங்கேயோ பக்கத்து ஊருக்குப் போயிட்டு பொழுது போச்சில வந்தாரு, பிறவு நாளெக்கு வாண்ணி சொல்லிப் பிட்டாரு. நேத்தும் வந்து இது பிடிச்ச காத்திருந்த, இன்னிக்கும் இதுபிடிச்ச அங்கேயே நாயாட்டம் காத்துக்கிடந்தன். எங்கேயோ ஆத்தாங்குடிக்கு எசமாபோயிட்டாங்களாம். நமக்கு தினே தினே, ஔச்சா கஞ்சு, இல்லே பட்டினி இப்படி அலஞ்சி, அலஞ்சி காலும் வலிச்சுப் போச்சு, வயிறும் பட்டினி என்று கூறிய அவன் முகத்திலே ஏக்கம் சொட்ட அவன்

கண்களிலே நீர் சொட்டிற்று. ஒரு அதிகாரியின் காலக்கிரமத் தவறுதலாலே, மூன்று தினங்கள் அதோ ஆடி, அசைந்து, ஊழிகாலப் புயலில் உயரப் பறக்கும் துரும்புபோல் செல்லும் ஆண்டியப்பன் உழைக்கவில்லை. தினக்கஞ்சிக்கு உழைத்துக் குடும்பத்தை ஊட்டும் அவன், மூன்று நாட்கள் உழைக்கவில்லை. பசியும் பட்டினியும் அவன் இல்லத்திலே படுத்துறங்குகின்றன. பாவம்! அந்த பச்சிளம்குழந்தைக் குமாரவேலோடு, மனைவி மீனாட்சியும் பட்டினி. ஜில் ஜில் ஜலங்கையோடு சப்தித்து செவலைக்காளை பூட்டிய சாரட்டில் செல்லும் சப்மாஜிஸ்ட்ரேட்டுக்கு, நாட்டின் நிர்வாகிக்கு, தேசத் தலைவருக்கு ஆண்டியப்பன் அனுபவிக்கும் அல்லல் தெரியுமா? ஆண்டியப்பனை அழைத்துவர ஆள் அனுப்பினேமே என்ற எண்ணம் அவர் அகத்தில் எங்கேனும் ஓர் மூலையிலாவது முடங்கிக்கிடக்குமா?

ஆண்டியப்பா. இன்றிரவும் நீ பட்டினிதானா?
உன் பச்சிளம் பசலையும் பாரியாளும் பட்டினியா?
கண்ணீர்கலந்த தண்ணீர்தான் உங்கள் ஆகாரமா?

என்னே! உத்தியோகத்தின் உயர்வு, ஏழையின் ஏக்கம். காலதவறுதலில் உற்சாகம் உத்தியோகஸ்தருக்கு. பட்டினி பசி பாமரனுக்கு. இத்தகைய நிலையைக்கண்டுதான் சீரற்ற, சீர்குலைந்த சமுதாயம் என சப்திக்கிறோம். சீர்திருத்தவாரும்

---

தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிழந்த பட்டணம் போலிருக்கிறான்.

நீதி மொழிகள்

சிறந்தமாணவச்சிற்பிகளே என்று அழைக்கிறோம். நாளை நீர் இந்நாட்டு மன்னர். நிர்வாகி, தலைவர், உத்தியோகஸ்தர். மன்னர் என்ற மமதையால், தலைவர் என்ற தலைக்கர்வத்தால், உத்தியோகஸ்தர் என்ற உளப்பெருமையால் நல்லொழுக்கத்தை நாசம் செய்து, காலக்கிரமத்தை அசட்டை பண்ணி பொது மக்களின் ஜன சமூகத்தின் அழிவுக்கு வழி தேடுவீரோ? இன்று மனைவி மக்களுடன் முத்தினப் பட்டினியில் மேனிவாடி நிற்கும் "ஆண்டியப்பன் என் அண்ணன்" என எண்ணிப்பாரும். ஈடில்லா மாணவரே! இரக்கம் சுரக்கிரதல்லவா? பிறர் துயரம் தன் துயரம் என எண்ணலே பெருமைதரும். பெரிய மனிதனுக்கும். சிற்பிகளே சிந்தனை செய்யுங்கள்.

தூயமனப்பண்பு. மன்னர் தொழிலோ, நிர்வாகத்துறையோ, உத்தியோகமுறையோ தூய மனப்பண்பு வேண்டுவனவேயாகும். தூயமனப்பண் பற்ற தலைவர்கள் குடியாட்சியிலே தலை தூக்குவதற்கு எண்ணுவதே பெருந்தவறாகும். கண்திறந்த சமுதாயம். விழி குருடு விலகிய சமுதாயம். அடிமை

---

சகலமான அறிவு ஞானத்தின் லட்சியமே நல்லொழுக்கத்தை வளர்ப்பது தான். நல்லொழுக்கத்தை உற்பத்தி செய்யும ஆலைகள் தான் பாடசாலைகளும் கல்லூரிகளும். நீங்கள் உங்கள் நல்லொழுக்கத்தை வளர்க்காமலும், உங்கள் எண்ணங்களையும் செயல்களையும் உங்கள் இஷ்டமபோல் அடக்கிபாளும் சக்தியும் பெறாமலும் இருந்தால் நீங்கள் பாண்டித்தியம் பெற்றதும் ஷேக்ஸ்பியர், வார்ட்ஸ்வொர்த் ஆகிய கவிஞர்களின் நூல்களைப்படித்ததும் வீண்.

காந்திஜி

யாயிருந்து அனுபவங்கண்ட சமுதாயம். தூயமனப் பண்பற்ற தலைவர்கள் நச்சுப்பற்களிடை நசுங்கி எழுந்த சமுதாயம். தூயமனப்பண்பற்று, பாரபட்ச தீர்ப்புகள் தந்து. பொதுஜனம் பாழாக உத்தியோகம் வகிக்கலாம், சர்க்கார் சிப்பந்தியாயிருக்கலாம், சலுகைகள் பெறலாம், கருப்பு மார்க்கட் குண்டோதரரோடு கடுநட்பு கொள்ளலாம். லஞ்சத்திற்கு தஞ்சம்தந்து நன்செய்யும், புன்செய்யும் வாங்கலாம் என்று விம்மி பெருமூச்சுவிடும் வம்பர்களின் வெறியாட்டங்களை வெட்டி வீழ்த்த சமுதாயம் விழித்துக் கொண்டது.

உத்தியோகத்துறையில் உளம் செலுத்தும் உன்னத நோக்குள்ள உத்தம மாணவரே, தூய மனப் பண்புடனே பள்ளியில் பயிற்சி பெறுங்கள் மாணவரோடு மாணவர் மாசற்ற மனதுடன் உறவாடுங்கள். தூய மனப்பண்புகொண்ட ஓர் ஒப்பற்ற சமுதாயத்தை சிருஷ்டியுங்கள்.

தூய மனப்பண்பற்று காமச்சேற்றிலே மூழ்கி கரைகாணாத மன்னர்கள், சுயநலபூபதிகள், பாரபட்சத்தீர்ப்பளித்த பார்த்திபர்கள், அநீதிப்போர்புரிந்த அதர்ம அரசர்கள், மடிந்து மண்ணாகிவிட்டதை மனத்தில் இருத்திக்கொண்டு மன்னர் தொழிலை மேற்கொள்ளுங்கள்.

---

*சிற்றின்பப் பிரியன் தரித்திரனாவான். பர இஸ்திரியின் வாய் ஆழமானபடுகுழி.*

நீதி மொழிகள்.

மன்னர் தொழிலே மலையுச்சியை நோக்கி நடைபோடும் மலை ஏற்றமாகும். அங்கே உத்தியோ கப்பெருமை என்னும் உராங்கொட்டங் குரங்குகள் ஒளிந்திருக்கும். லஞ்சம் என்னும் நச்சுப் பொய்கை கள் நிறைந்திருக்கும். சிற்றின்பம் என்னும் சுற்றிப் பிடிக்கும் மலை அரவுகள் அங்கங்கே மறைந்திருக் கும், காலக்கிரமம் தவறுதல் என்னும் கொடிய விலங்குகள் கர்ஜித்து நிற்கும். வஞ்சனையால் வாழ்வு தேடுதல் என்னும் வழுக்குப் பாறைகளும், மிஞ்சுங் கோபம் என்னும் பாசிகளும் நிறைந்திருக்கும். இத் தகைய இடுக்கண் நிறைந்த, இன்னல் மிகுந்த, சோதனைகள் செறிந்த வாழ்க்கைப் பிரயாணத்தை நிர்வாகத் துறையை நோக்கி நடைபோட நினைக் கும் மாணவ, மன்னர்களே சற்று நின்று நிதா னித்து வழியை நோக்கிப்பாருங்கள்.

அதோ அங்கங்கே எச்சரிக்கை ஸ்தம்பங்கள் எழுந்து நிற்கின்றனவே, அவைகள் உங்கள் கண் களுக்குப் புலனாகின்றனவா?

அதோ மத்திய தேசிய, மாகாண, ஸ்தலஸ்தா பன மன்றங்களை நோக்கிப் பாருங்கள். அங்கங்கே அழகு சோபாக்களிலமர்ந்து, ஆரஞ்சுப் பழங்கள் உறிஞ்சி. அயர்ந்து தூங்கும் ஜனப்பிரதிநிதிகளைக் காண்கிறீர்களா? அவர்களும் இந் நாட்டை ஆள

---

ஏழையாயிருக்கிறான் என்று ஏழையைக் கொள்ளையிடாதே சிறுமையானவனை நியாயஸ்தலத்தில் உபத்திரவப்படுத்தாதே.

நீதி மொழிகள்

வந்தவர்கள்தான். அரசியல் மண்டபத்தில் அயர்ந்து தூங்கும் அவர்களுக்கு உள் நாட்டு வேலைகள் நிரம்ப உண்டு. விக்கிரமச் செட்டியார் வீட்டுக்குக் காலையில் அஸ்திவாரக் கல்லை நட்டுவிட்டு, நட்டுவஞர் மகள் நாட்டிய அரங்கேற்றத்தில் அரிய சொற்பொழிவாற்றிவிட்டு, வில்லங்க முதலியார் மகள் விவாகத்திற்கு வெள்ளிக் கூசா பரிசளித்துவிட்டு, 'பக்கினல்' படக் காட்சி ஆரம்ப விழாவில் சிற்றுண்டி அருந்திவிட்டு, சிநேகிதர் ஒருவருக்காக (தனக்காக அல்ல சிநேகிதருக்காக) ஜேகரி பெர்மிட் வாங்கிக்கொண்டு அசெமபளிக்கு அவசர அவசரமாக வந்த அவரை நித்திரை என்னும் சத்துரு மேற்கொண்டுவிட்டால் குற்றம் யார் மீது? ஜனக்குரல் இதோ எச்சரிக்கை தருகிறது. அரசியல் மண்டபத்தில் அயர்ந்து தூங்கிக்கொண்டு கேள்வி நேரத்தில் குரட்டைபோடும் பாராளும மன்றப் பிரதிநிதியே! நாட்டு சின்னமணிந்து, கை நீண்ட, காலரில்லா ஜிப்பா போர்த்து, தோல் பை ஏந்தி கண்ணியக் கும்பிடுபோட்டு, கருணை கொட்ட, பரிவுபூண, சாந்தம் ஜொலிக்க, வீரம் ஒலிக்க, கண்டிப்பு கொதிக்க, மேடைகள் அதிர, மேஜை நாற்காலிகள் உடைய ஓங்கிக்குத்தி 'செய்வேன்' 'போடுவேன்' 'கொண்டுவருவேன்' என்று ஒப்பாரி வீசி ஜீப் காரில் சிட்டாய்ப்பறந்து பட்டிகளிலும் கூட்டம் போட்டீரே, செய்ததென்ன? போட்டதென்ன? கொண்டுவந்ததென்ன?

---

ஏழுவயது ஒரு சிறுவன் தாங்கள்தாஞ அயின்ஸ்டீன்?
நானும் நோபல் பரிசு பெற எத்தனை தினங்களாகும்?

அயின்ஸ்டீன் "நன்றாய்ப்படி; நாளைக்கே அப்பரிசைப் பெறலாம்."

செய்யவும் முடியாது, போடவும் இயலாது கொண்டுவரவும் சக்தியில்லை. அரசியல் மண்டபத்தில் தூங்காமலும், அக்கம் பக்கம் கை நீட்டாமலும் இருக்கப்படாதோ? எச்சரிக்கை! குடியாட்சி! குடியாட்சி! அடுத்த தேர்தலுக்குள் அகப்பட்டதைச் சுருட்ட. அகால எண்ணத்தால் அழிவைத் தேடாதீர். மாணவரே! மக்களின் பிரதிநிதிகள் மண்டபத்தில் தூங்குகிறார்கள் மனக் கண் முன் நிறுத்திப் பாரும். உங்களைப்பற்றி ஜனக்குரல் இத்தகைய சாட்சி கொடுத்தால்.............?

"இதோ சர்க்கார் சிப்பந்தி சந்திரா செல்கிறான் பாருங்கள். சாலை ஓரமாய்ச் செல்பவன்தான் சந்திரா. ஜனக்குரல் அவனைப்பற்றி என்ன சொல்லுகிறது சற்று செவி சாய்த்துக் கேளுங்கள்."

சந்திரா நல்லச் சந்திரா. அவன் பெயரையே என்னிடம் உச்சரிக்காதே. சந்திரா ஒருபேய். பணப்பேய், பாமரரிடமும் பொது மக்களிடமும் பணம் பறிக்கும் ஒரு லஞ்சப்பேய். அவனிடம் பணம்தான் பேசமுடியும், பொது ஜனம் பேசமுடியாது. அவன் முகமே மூதேவிக்கு இருப்பிடமாகிவிட்டது. ஒரு குளிர்ந்த பார்வையுண்டா? இன்னுரை உண்டா? ஐந்து ரூபாய் நோட்டைக் கவரில் வைத்து நீட்டினால் புன்னகை மலரும். இன்னுரை எழும்பும். "என்ன சார் வேண்டும் எல்லாம் நான் முடிச்சுத்

---

கடமையைச் செய், வேறெதையும் கவனியாதே.

கீதை

தாரேன்'' என்பான் அவன். இல்லை எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்திலே. ஸ்ரீமான் சந்திராவின் திருநாமம் சந்தியில் படும் அலங்கோலத்தைக் கேட்டீர்களா? சந்திரா சர்க்கார் சிப்பந்திதான். இந்நாட்டு மன்னர்தான். நிர்வாகிதான். இப்பொழுது கொஞ்சம் செல்வவான்தான். ஜேபியும் கொஞ்சம கனமதான். ஆனல் அவன் கண்ணியம் எங்கே? மானம் எங்கே? மரியாதை எங்கே? மாணவனாய் இருந்தபொழுது பெற்றப்பள்ளிப்பயிற்ச்சி எங்கே? பறந்து போயிடுச்சி பாவம்!

சந்திரா இருந்தும் இறந்ததற்குச் சமானமல்லவா?

மாணவரே! சந்திராவின் சந்தி வந்தனை உமக்கு ஏற்பட்டால்? சிந்தனை செய்யும்.

லஞ்ச ஊழலிலே அமிழ்ந்து, கரைகாண இயலாது தத்தளித்து வேலை. இரககம்,———வேலை நீக்கம்——— தற்காலிக நீக்கம்.

பெரும் எத்தனையோ உத்தியோகஸ்தரின்ர்களின் நாமதேயங்களைக் கேள்விப்படும்பொழுது நடுங்குகிறதா உங்கள் இளம்உள்ளங்கள்? பலம்பெருத இளம் தோள்களோடும். அநுபவமற்ற உள்ளங்களோடும் இந்நாட்டை நிர்வாகிக்கப்போகும் நீங்கள் என்ன தீர்மானத்தோடு இத்துறையில் இறங்குகிறீர்கள்? தூய மனப் பண்புடன் ஒழுகி தேசத்தின் தொண்டனாய் வாழ்வேன் என்ற தீர்க்கமான தீர்மானம்

---

இன் சொல் வழங்கலும், ஈகை மிகுதலும், பகைமை ஒழிதலும், ஒற்றுமை மேவலும், அறிவு ஓங்கலும், ஆக்கம் தழைத்தலும் என்நாளோ!

ஒரு அறிஞர்.

கொண்டு திருத்தியமையுங்கள் இத்திறனற்ற சமுதாயத்தை. இளமையிலேயே பணத்தில் மட்டும் பற்றுக்கொண்டு, நண்பர்களுக்காக நீதி விலகி, பழகினவர்களுக்காகப் பாரபட்சத் தீர்ப்புச்செய்து, உறவினர்களுக்காக உரிமைகளை விட்டுக்கொடுத்து வாழ்ந்திரேயானல் வழுகி வீழ்ந்துவிடுவீர். வாழ்விலே என்று எச்சரிக்கை தருகிறேன். பின்பு எழலாம் என எண்ணினல் ஏமாற்றம் நிச்சயம். ஆனல் நீதியாய் நடந்து, நேர்மையாய் ஒழுகி, தூயமனப்பண்புடன் வாழ்வு நீங்கள் கொண்டாலும், வந்தனையன்றி நிந்தனை உங்களை சிற்சில சமயங்களில் தஞ்சம் தேடும். அங்கும் நின்று நிமிர்ந்து நேர்வழி நோக்குங்கள். வந்தனைகளுக்குப் பதில் நிந்தனைகள் அடைந்து நீதிக்காகப் போராடி இன்னுயிர் நீத்தப் பெரியோர்களை வெற்றிச் சின்னங்களாக நிற்கக் காண்பீர்கள். அதோ!

அந்த கொல்கதாமேட்டில் கோரச் சிலுவையில் பாவப் பரிகாரி படும் துயரைப்பாருங்கள். அருகில் சென்று அந்த அருமை இரட்சகரைப் பாருங்கள். பாவப்பரிகாரியாய்ப் புவியில்பிறந்த பரமபாலனைப் பாருங்கள். மக்களின் மாசுபோக்க வந்த மகிபருக்கு முள்முடி பரிசு. பாவம் செய்து பாழ் நரகம் அடையாதே என்ற அன்பர்க்கு பேரீட்டி

---

தேனை மிகுதியாக உண்பது நல்லதல்ல. தற்புகழைத் தேடுவதும் புகழல்ல. பொன்னும் மிகுதியான ரத்தினங்களுமுண்டு அறிவுள்ள உதடுகளோ விலையுயர்ந்த ரத்தினம்.

நீதிமொழிகள்

பரிசு. கை தூக்கிக் கரை சேர்ப்பேன் என்ற கடவு
ளுக்கு ஐங்காயம், மூவாணி பரிசு. நீதி நேர்மை தவ
ரூது, பிறர் துயரம் தாங்கி, பொதுமக்களின் நலத்
துக்காக தன் வாழ்வை விரயம் செய்வோர்க்கெல்
லாம், இவ் வையகம் அளிக்கும் வந்தனைகளும், பரிசு
களும் இவைகளே. நிந்தனையும், முள்முடியும், பே
ரீட்டியும், மூவாணியும், ஐங்காயங்களுடன் கோரச்
சிலுவையும், கசையடியும், தடியடியும், கன்னத்
துதையும் பரிசுகளாகப் பெற்றும் "பிதாவே இவர்
களுக்கு மன்னியும்" என்ற பிரார்த்தனையை
ஏறெடுத்த பரமபிதா உங்களை ஊக்கி வழி காட்டும்
வெற்றிச் சின்னமன்றோ!

ராம்.... என்று சாய்ந்துவிட்ட அண்ணல்
காந்திஜியைப் பாருங்கள். எந்த நாட்டிற்காக, எந்த
மக்களுக்காக எந்த மக்களின் சுதந்திரத்திற்காகப்
போராடி, அஹிம்சை வழி நின்று இன்னல் அனு
பவித்தாரோ அதே நாட்டின் மக்களில் ஒருவன்
கையாலேயே மாண்டுவிடவில்லையா. அவர் செய்த
தியாகத்திற்கும், தொண்டுக்கும் இவ்வையகம் பரிசு
தந்தது. வணங்கிக் குண்டு பாச்சியது கனவிலும்
தமையடுத்தாருக்கும், தரணியில் பிறந்த எவருக்கும்
வஞ்சனை எண்ணிடாத நெஞ்சிலே. ... மூக்குண்டு
பரிசு நம் காந்திஜிக்கு. உங்களின் வழிகாட்டி
வெற்றிச் சின்னமன்றோ?

---

குணமே மணம் குணமில்லா மாணவர் மணமில்லா
மலர்களே. Rev. சத்தியசாமுவேல்.

"குத்தீட்டி ஒரு புறத்தில் குத்தவேண்டும்,
கோடரி ஒருபுறத்தைப் பிளக்கவேண்டும்,
ரத்தம் வரத் தடியால் ரணமுண்டாக்கி
நாற்புறமும் பலர் உதைத்து நலியத்திட்ட
அத்தனையும் நான் பொறுத்து அஹிம்சை காத்து
அனைவரையும் அதைப்போல நடக்கச்சொல்லி
ஒத்துமுக மலர்ந்து தட்டில் சிரிப்பினோடும்
உயிர் துறந்தால் அதுவே என் உயர்ந்த ஆசை"
என்றுரைக்கும் காந்தியை நாம் எண்ணிப்பார்த்தால்
எலும்பெல்லாம் நெக்கு நெக்காய் உருகுமன்றோ?
(ஆஸ்தானகவி) நாமக்கல் கவிஞர்.

அடிமை வியாபாரத்தை நிறுத்த முயன்றார். அமெரிக்காவின் தனிப்பெரும் தலைவர் ஆபிரகாம் லிங்கன். எதிர்ப்பு எல்லையை மீறியது. பிரபுக்களும் தனம் பல படைத்தோரும் தூஷித்து நிந்தித்தனர். அயராது உழைத்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அடிமை வியாபார நிறுத்தல் முயற்சியில் வெற்றி கண்டார். மனிதனை மனிதன் மிருகமாய் நடத்திய கொடுமை அமெரிக்காவிலே நின்றுபோயிற்று. ஆனால் சீர்திருத்தச் சிற்பி செங்குருதியில் புரண்ட தாகச் சரித்திரம் சொல்லுகிறது. அயராது உழைத்து அடைந்த பலன் அகால மரணம். செங்குருதியில் புரளும் இச்சீர்திருத்தச் சிற்பியும் உங்கள் வழிகாட்டிச் சின்னமன்றோ!

சாக்ரடிஸ் ... விஷம் ஊட்டப்படவில்லையா?

அர்ச். செபஸ்தியான் அம்பால் எய்யப்பட்டும், வன விலங்குகளுக்கு இறையாகியும் இயற்கை எய்தவில்லையா?

பரி. ஸ்டுதவான் கல்லெறியால் கொலையுண்ணப்படவில்லையா?

பரி. அந்தரேயா இன்று(X)மார்க் குருசில் கோரமரணம் எய்தவில்லையா?

பரி. தோமாஸ் வாள் முனையில் வாழ்விழக்கவில்லையா?

அர்ச். அருளானந்தர் சேதுபதியின் சினத்துக்காளாகி சிரமிழக்க வில்லையா? ......வழிகாட்டி நிற்கும் வெற்றிச்சின்னங்களன்றோ!

## தூய உடல்.

வெண்துகிலணிந்து, வில்ஸ் ஒன்றை வாயில் கௌவி வலிவிழந்த தோற்றத்தோடு "ஜில்" என்று வீதிவழி சென்ற ஒரு கல்லூரிநண்பரைக்கண்டேன். அருகில்சென்றேன். அன்பருக்கு முகமன் தெரிவித்தேன். ஏதோ கேள்விகள் கேட்டு வைத்தேன். இருபதுவயதுக்குக்குறையாத, இருபத்தைந்துவயதுக்கு மேற்படாத கல்லூரி மாணவரே. வரண்டமுகம், இருண்டு சுருண்ட கேசம். துவண்ட கால் கரங்கள். இளமையின்தேஜஸ் மங்கி தேமல்களும் பற்றுகளும் மேனியெங்கும் நிறைந்திருந்தன.வெண்ணிற தூள் அவைகளைமாற்றமுயன்யதற்கும அங்கங்கே அடையாளங்களில்லாமலில்லை. மூக்குக் கண்ணாடி வேறுமுகத்தை அலங்கரித்தது. Short sightஎன்று இயம்பி ஜாடையாய் சிரித்தார். இல்லை சிரிக்க முயன்றார். சிரிக்கவும் உடலில் சக்தியில்லை என்பது எனக்கு விளங்காமலில்லை. நண்பரிடமிருந்து விலகி வேறு வழியாக நடந்தேன். சற்று அப்புறம் போய் ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்தேன், இவர்தானோ இந்நாட்டு மன்னர் என்பதை எண்ணிய என்உள்ளம் உடைவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தலை 'கிர்' என்று

---

நான் மறுபடியும் பிறக்க நேரிட்டால் இராம்ஸேயாகவே பிறந்து இராம்ஸேயாகவே வாழ விரும்புகிறேன்.

(1904-ம் ஆண்டு நோபல் பரிசுபெற்ற ஸர்வில்லியம்ராம்ஸே)

சுழன்றது. ஏதேதோ யோசித்தேன். என்னென்னவோ வாய்விட்டுக் கூறினேன். என்ன யோசித்தேன், என்ன கூறினேன் என்பதை அப்படியே இங்கு குறிப்பிட முடியாதேபோயினும் கருத்தையேனும் தொகுத்துக்கூற சக்தியிருக்றது.

ஐயா, ஜில்ஸ் காலர் ஜிப்பா அணிந்து வில்ஸ் ஒன்று வாயில் பிடித்து வீதி வழி செல்லும் வலி விழந்த வாலிப நண்பரே! நீர் இன்னாட்டு மன்னர் என்பதை எண்ணும் என் உள்ளம் எல்லையற்ற வேதனையால் விம்முகிறதே. இத்தகைய ஆபாச நிலையில் உடல் நலத்தைப்பேணி நிற்கும் நீர் இந்நாட்டை எந்நிலையில் புறக்கப்போகிறீர். இந்நாட்டின் வாழ்வும் தாழ்வும் உம்மைப் பொறுத்ததல்லவா? "நாட்டின் நிர்வாகியாகவேண்டும் என்ற நினைவு நீர் கொண்டால் நிச்சயம் தூயமனப்பண்பு வேண்டும்" என்று தலைவர்கள் முரசு கொட்டுகிறார்களே அம்முரசொலிக்கு முரண்பாடாக உம் உடற்பயிற்சி இருக்கிறதே மனப்பயிற்சி எங்ஙனம் உண்டாகும்.

---

பலாத்காரத்துக்கு நான் பணிவதாயிருக்கலாம். பலாத்காரத்தினால் நான் வீழ்வதாயிருக்கலாம். ஆனால் உங்கள் நிபந்தனைகளுக்கு நான் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டேன். பதவி எற்றுக் கொள்ளும் போது நான் எடுத்துக் கொண்ட தேச விசுவாசப் பிரமாணத்துக்கு ஒரு போதும் துரோகம் செய்யமாட்டேன்.

பிரஸிடெண்ட் மிக்லாஸ்

வரண்ட முகத்தையும், துவண்ட அங்கங்களையும், இருமிப்புகைக்கும் நெஞ்சையும், வில்ஸ் புகையின் துர்நாற்றத்தையும், சிறிது விளையாடியதும் ஏற்படும் களைப்பையும், இவைகளின் காரணங்களையும், சிந்தித்த சமயம் என்றாவது உண்டா?

ஆளவருவோரே! ஆராய்ந்து பாரும்!

பருவம் உம்மைப் பற்றிப்பிடிக்குமுன் இயற்கைத் தூண்டலுக்கு இணங்கி வாழ்வை பாழ்படுத்திவிட்டீரோ?

பெற்றோர் பட்டியில், நாம் பட்டினத்தில் பார்ப்பது யார் என்ற எண்ணத்தில் அகால விளையாட்டுகளால் உம் அழகிய அங்கங்களை அலங்கோலமாக்கிக்கொண்டீரோ? (எலும்புக்கூடுகாட்டும் மார்பு, சூம்பிய கால் கரங்கள்)

துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்திலேயே பிழைபட ஒழுகி, பருவ உணர்ச்சியில் சிந்தனையைச் செலுத்தி சீரழிந்துவிட்டீரோ? அந்தோ! காமச் சேற்றில் மூழ்கிக்கெட்டழிந்த காவலர்கள் சரிதைகள் கண்கள் முன் இல்லையா? கருத்தைச் செலுத்திப்படித்தீரா காவலர்கள் கதைகளை? இனியேனும் உணர்ந்து உய்யும் வழிதேடும். காமச்சேற்றில் கண்ணிழந்தோன் என்ற கயமைப்பட்டமும், ஸ்திரிலோலன் என்ற அவலப்பெயரும் வேண்டாம். காவலன் என்ற கண்ணியப் பட்டமும், பாராள்வோன் என்ற புதுப்பெயரும் பெற்றுப் புவியில் புகழ்பெறவேண்

டும் நீர். உமக்கு அடிமைப்படவேண்டியவைகளுக்கு நீர் அடிமைப் படவா? அஃது அறிவுடமைதானா? இல்லை-இல்லை. உமக்கும் உம் அன்பர்களுக்கும் ஆறாத்துயரல்லவா அது! தூயமனப் பண்பு குடிகொள்ளும் உடலையும், திறமையாகக் காத்துக் கொள்ளும் திறன் தேவையன்றோ? உடலை உருக்கி, உருவத்தை உருக்குலைத்து, அங்கங்களை அலங்கோலப்படுத்தி, வாணாளைக்குறுக்கி நிற்கும் அற்ப நிமிட இன்ப உணர்ச்சிகளை நெட்டித்தள்ளி ஓட்டுவதல்லவா உயர்வுடன் உய்யும் வழி! மாணவரே மனப்பயிற்சியும் உடற்பற்சியும் ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கும் பிணைப்புகள் என்பதைப் பள்ளியில் பயின்றும், உடல் நலத்தை உதாசீனம் செய்வது நாட்டு நலத்தையே உதாசீனம் செய்வதாகும் என்பதை உணர்ந்து, உடல் நலத்தைக் காத்து, தூயஉடலில் தூயமனப்பண்பைப் பதித்து தனக்கும் தேசத்திற்கும் தொண்டராகத் திகழ உங்களைத் தட்டி எழுப்புகிறோம். தூய்மையான விஷயங்களைக் கேட்கும் பயிற்சிபெறுங்கள். அவைகளையேப்பேசி, நடைமுறை வாழ்க்கையில் நிலைநாட்ட முயலுங்கள். தூய்மை பயக்கும் நூல்களைத் தேர்ந்து அறிஞர்களின் கருத்தோவியங்களைக் கடைபிடியுங்கள் பெண்களின் பிரேமப்பேச்சில் பிரீதிகொள்வதைவிட; பெரியார்களின் பொன்மணிகளான எழுத்தோவியங்களை எடுத்துப் படிப்பதில் பிரீதிகொள்ளுங்கள். பயன்பெறுவீர்கள். சுட்டிக்காட்டி, குட்டிச்சொல்லித்தட்டி, எழுப்பும் என்வார்த்தைகள் பயன்பெறட்டும் பள்ளிமாணவரே.

## மனச்சாட்சி என்னும் அறப்போர் வீரர்.

தூய உடற் பயிற்சியும். மனப்பயிற்சியும் மருவிடின் மாணவர் மனச்சாட்சி என்னும் அறப்போர் வீரரை வீழ்த்திடும் வீரம் யாருக்கு ஏற்படும்?

மாணவரே உம் மனச்சாட்சி என்னும் அறப் போர் வீரர்களுக்கு, அதோ அலுவல்கள் எதிர் நோக்கியிருக்கின்றன. தவறுஎன்று கண்டவற்றை தட்டிக்கழிக்க முயலாது வெட்டி வீழ்த்தும் வீரம், வன்மை உம் மனச்சாட்சிக்கு உண்டா? தயைதாட் சணியம் என்ற பெயரால் தவறுகளுக்குத் தலை வணங்கிச்சென்று தவறிவீழ்ந்த தலைவர்களின் முடிவுகளைக்கற்றிருப்பீர்களே. இதுகுற்றம், இதுகுற்றம் இன்மை என்று கண்டபின் கடமைசெய்யத்தவறிய நிர்வாகிகள் மக்களின் கோபத்துக்குள்ளாகி நிலத்தில் புரண்டதுண்டே. உணர்ந்து, உள்ளதை உள்ளபடி தீர்ப்பளியுங்கள். "மனச்சாட்சியை மழுங்கி மாசுபடுத்திய மாணவ மன்னர்கள்" என்ற மான ஈனமான பட்டத்தை மக்கள் உங்கள் மீது சுமத்த இடந்தராதீர்கள். மனச்சாட்சியால் அறப் போர் புரியுங்கள். மரியாதைக் காவலனை என் மனச்சாட்சியை மாசுபடுத்தி, மழுக்கி மாணவ மன்றத்தில் நான் வாழ்வதைவிட உயிர்விடுவது மேல் என்னும் உணர்ச்சிகொண்டு உலகாளும் துறையில் குதியுங்கள். இனவெறி. மதவெறி. பழக்கவெறி என்னும் பண்புகள் உங்கள் உத்தம மனசாட்சி முன் மறைந்து விடட்டும். நேர்மை காப்போன் என்ற நாமமும். கடமை தவறாத காவலன் என்ற கண்ணிய, பட்டமும், உண்மைபேசும் உத்தி

---

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற் சென்று இடித்தற் பொருட்டு.

திருக்குறள்

யோகஸ்தன் என்ற உன்னத உரையும் உம்மை வந்தடையும். உயர்வடைவீர். உலகு அதைக்கண்டு களிப்புக்கொள்ளும்.

இறுதியாக கூறுகிறேன்.

இளைஞர்களே!

நீவிர் இந்நாட்டு மன்னர். இவ்வழகிய இளம் உடலுடன் இவ்வுலகுக்கு நீங்கள் பணிபுரிய வேண்டும். சிறந்த சேவைக்குரிய இவ்வுடலைச் சிற்றின்ப நுகர்ச்சிக்கு அடிமைப்படுத்த வேண்டாம். இக் கட்டிளம் உடலை காமச்சேற்றால் கறைப்படுத்த வேண்டாம். கோல் ஏந்த வேண்டிய கரங்களால் கோதையர் கூந்தலைக் கோதிக்களிப்புறவும் நீதியின் சின்னங்கள் புரளவேண்டிய உங்கள் நெஞ்சிலே, வஞ்சியர் கொஞ்சிப் புரளவும் வேண்டாம். காளையுடலை காமச்சேற்றால் கறைப்படுத்தும் கயமைக் குணத்துக்குக் கல்லறை கட்டுங்கள். மோகனப் புன்னகைகளுக்கும், முல்லைப்பற்களுக்கும் முத்தாய்ப்பு வையுங்கள். காலக்கிரமத்தவறுதல், பாரபட்சத் தீர்ப்பளித்தல், மனச்சாட்சியை மழுக்குதல் போன்ற கீழ்மைக்குணங்களை குழி தோண்டிப் புதையுங்கள். அழகிய இவ்வுடலை ஆண்மையுறச் செய்யுங்கள். தூயமனப்பயிற்சி பெறுங்கள். நல் மனச்சாட்சியைக் காத்துக்கொள்ளுங்கள். குடியரசு இந்தியாவில் கோல் ஏந்துங்கள்! குடிகள் குதூகலம் கொள்ள கோணல் வழிகளையும், கரடுமுரடு பாதை

களையும் செப்பனிடுங்கள். பாமரரின் பணியாட்களாய், நாட்டு மக்களின் நண்பர்களாய், ஏழைகளின் பங்காளர்களாய், மூடப்பழக்கங்களின் பரம வைரிகளாய், கருப்பு மார்க்கட் காதகர்களின் கண்கள் கண்டஞ்சும் கடமையுணர்ச்சி உள்ளவர்களாய் காணப்படுங்கள்.

தூயஉடல், தூயமனது, நல்மனச்சாட்சி இவைகளைப்பிரமாண வார்த்தைகளாகக் கொண்டு பயிற்சி பெறுங்கள். பணி புரியுங்கள்!

•

எமது அடுத்த வெளியீடு

**ஆசிரியரின் கடமையும், உடமையும்.**

**கால்டுவெல் இதைக் கண்டால்..............?**

**காதலும் கலாசாலையும்.**

சௌத் இந்தியன் லித்தோ பிரஸ், லிமிட்டெட், தூத்துக்குடி 3-'50

6-62
N50

Prop :-

# S. P. V. ராஜரத்தினம் நாடார்.

ரத்தின விலாஸ் போர்டிங் & லாட்ஜிங்

## பிராமணாள்

## காபி & சாப்பாடு ஹோட்டல்,

## திருச்செந்தூர்.

★

பிரயாணிகள் தங்குவதற்கு இடவசதிகளோடு
சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படும்.

★

டீ பார்ட்டி, கார்டன் பார்ட்டிகளின்
ஸ்பெஷல் ஆர்டர்கள்
குறித்தநேரத்தில் சப்ளை செய்யப்படும்.

# மனைதத்வமும் குடும்ப வாழ்க்கையும்

(தமிழ்—280 பக்கம்)

இது ஓர் குடும்ப நூல். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புஸ்தகம் இருக்கவேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், யுவர்கள், யுவதிகள், முதியோர்கள் யாவரும் வாசித்தறியவேண்டிய அரிய விஷயங்கள் அடங்கியது. யாருவருக்கும் விளங்கத்தக்கதாக, மனைதத்வ அடிப்படையில் குடும்ப வாழ்க்கைத் தத்துவங்கள் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

**விலை ரூ. 1—12—0**

**கார்ட் போர்ட் பைண்டிங் ரூ. 2—0—0**

**திருமணப் பரிசாக அளிப்பதற்கு**

**விசேஷித்த பைண்டிங் ரூ. 3—6—0**

> "மிகவும் பயன் தரும்படியான விஷயம், மிகவும் நல்ல தமிழ், சிறந்த அச்சுக்கோர்ப்பும், உங்கள் புத்தகம் என் மனதைக் கவர்ந்தது" —ராஜாஜி.

பிரதிகள் பாளையங்கோட்டை டையோஸிஸன் புக் டிப்போவிலும், நூலாசிரியரிடத்திலும் கிடைக்கும். பெரிய ஆர்டர்களுக்கு பார்சல் சார்ஜ் இன்றி அனுப்பி வைக்கப்படும்.

ஆசிரியர் விலாசம்:

REV. SATHIA SAMUEL, B. A., L. T.,
Principal,
Bishop Sargent
Secondary Training School.
Palamcottah.

38
2-171

எதிர்பாருங்கள்?

## காதலும் - கலாசாலையும்.